2013 ஏப்ரல் 19]

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுவாமி சகஜானந்தா அவர்களுக்கு மணிமண்டபமும், சிலையும் நிறுவச் சொல்லி இங்கே கேட்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதி, மதம் பார்க்காமல், வாழ்ந்து மறைந்துவிட்ட மாபெரும் தலைவர்களுக்கும், சான்றோர்களுக்கும் மணிமண்டபமும், சிலைகளும் அமைத்து பெருமை சேர்த்துக்கொண்டிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் உறுப்பினருடைய இந்தக் கோரிக்கையும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 280, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

280—

குடமுழுக்கு

***5745—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, உக்கிரன்கோட்டை அருள்மிகு சொக்கலிங்கசுவாமி திருக்கோயிலில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

[2013 ஏப்ரல் 19

திருநெல்வேலி தொகுதி, உக்கிரன்கோட்டை அருள்மிகு சொக்கலிங்கசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். ஆண்டு வருமானம் ரூ.5,000—க்குகீழ் உள்ள அந்தச் சிறிய திருக்கோயிலுக்கு ஒரு கால பூஜை என்ற திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திருக்கோயிலுக்கு திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்திட சுமார் 30 இலட்சம் ரூபாய் வரையில் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இத்திருக்கோயில் பழமையான திருக்கோயிலாக இருப்பதாலும், போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினாலும் 14—வது நிதி ஆணையத்திடம் நிதி வேண்டி பரிந்துரை செய்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணைகளைப் பெற்று திருப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தாயின் மூத்த மகள், தாய்க்குலத்தின் தனிமகள், தரணிபோற்றும் தங்க மகள், (மேசையைத் தட்டும் ஒலி) தனது ஒரே கையெழுத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) ஆறு கோடி தமிழர்களின் தலையெழுத்தை மாற்றிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நாளை ஒரே கையெழுத்தில் 100 கோடி இந்தியர்களின் தலையெழுத்தை மாற்ற இருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) திருநெல்வேலி தொகுதி, உக்கிரன்கோட்டை அருள்மிகு சொக்கநாதசுவாமி திருக்கோயில் உக்கிரபாண்டிய மன்னரால் பத்தாம் நூற்றாண்டு காலத்தில் கட்டப்பட்ட பழம்பெருமை வாய்ந்த கோயிலாகும். அந்தக் கோயிலை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் 14 ஆம் நிதி ஆணையத்திடமிருந்து நிதியைப் பெற்று குடமுழுக்கு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு, இந்தியா மற்றும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் ஒப்பற்ற தலைவியாய் இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

2013 ஏப்ரல் 19]

அவர்களுக்கும், வாரித் தந்த வள்ளல் கரங்களுக்கும் என்றும் நன்றியுடையவனாக இருப்பேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 281, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

281—

பேரூராட்சியை இணைத்தல்

***7593—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, உதயேந்திரம் பேரூராட்சியை மீண்டும் வாணியம்பாடி வட்டத்துடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டத்தில் உள்ள உதயேந்திரம்–1, 2 மற்றும் கொல்லக்குப்பம் ஆகிய மூன்று கிராமங்களை வாணியம்பாடி வட்டத்தில் சேர்ப்பது குறித்த முன்மொழிவுகள் பெறப்பட்டவுடன் அரசளவில் இதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாழ்பட்டு நின்ற தமிழகத்தை, பாரதமே வியக்கும் வண்ணம், நாளும் ஒரு திட்டம் தந்து தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர், ஏழைகளின் இதய*